13.09.2019 <u>O.S.58/2016</u>

*பிசா.1 சிந்துஜா*

*(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)*

**குறுக்கு விசாரணை**

நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தை என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்று சொன்னால் நான் சொல்லி தான் தயார் செய்தார். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். வழக்கின் விபரங்கள் எனக்கு நன்றாக தெரியும். வாதி கலா சீனிவாசனின் இளைய மகள் என்றால் சரிதான். அவர் எனது தாத்தா ஆவார். என் கணவருடைய அப்பா தான். என் மாமனார் 1ம் பிரதிவாதி சீனிவாசனின் மனைவி ஆவார். 2ம் பிரதிவாதி சரோஜா சீனிவானசின் மூத்த மகள் ஆவார். 3ம் பிரதிவாதி சீனிவாசனின் 2வது மகள் ஆவார். என் கணவர் சீனிவாசனின் மகன் ஆவார். என் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நானும், என் மகனும் 4 மற்றும் 5 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 1வது இலக்க சொத்து வயல்பட்டியில் இருக்கும் பூர்வீக வீடு என்றால் சரிதான். அதில் பாதி சொத்து எனது தாத்தாவுக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்டது. 2வது இலக்க சொத்து என் தாத்தாவுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான். கடனை அடைத்து என் தாத்தா மீட்ட சொத்து ஆகும். மேற்படி விபரத்தை என்.னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் நான் சொன்னேன். நான் சொல்வது போல் அச்சொத்தானது கடனை மீட்டு பெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 3வது இலக்க சொத்து கேரளாவில் உள்ள பூர்வீக எஸ்டேட் என்றால் சரிதான். 4வது இலக்க சொத்து தேனி சுப்பன்தெருவில் உள்ள காலி இடம் என்றால் சரிதான், 5வது இலக்க சொத்து வாசவி காலனியில் உள்ள வீடு என்றால் சரிதான். இந்த சொத்து தவிர போடேந்திரபுரத்தில் என் தாத்தாவுக்கு வயல் மற்றும் தேனி பெரியகுளம் ரோட்டில் பூர்வீகமாக வீடு இருந்தது என்றும் சொன்னால் சரிதான்.

போடேந்திரபுரத்தில் என் தாத்தாவுக்கு வயல் மற்றும் தேனி பெரியகுளம் ரோட்டில் பூர்வீகமாக வீடு ஆகியவற்றை என் தாத்தா உயிருடன் இருக்கும் போதே விற்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். அது தவிர என் தாத்தாவுக்கு வேறு சொத்துகள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தவிர சீனிவாசனுக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை. நான் தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிராது 5ம் இலக்க சொத்தான வீட்டின் பாதை சம்பந்தமாக வாதி மற்றும் அவரது கணவர் மீது வழக்கு ஓஎஸ் நம்பர் 164/2014 என்ற வழக்கை போட்டுள்ளேன் என்றால் என் கணவர் அந்த வழக்கை தாக்கல் செய்தார். அவர் இறந்தபிறகு நான் அந்த வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன். தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒஎஸ் நம்பர் 27/2014 வழக்கை வாதியின் கணவர் கணேசன் தாவா வழக்கின் 4ம் இலக்கச் சொத்தில் முருகேசன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை காலி செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்களும் வாரிசுகளாக கட்சி சேர்ந்துள்ளோம். 4ம் இலக்க சொத்து சீனிவாசனும், கணேசனும் கூட்டாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒஎஸ் நம்பர் 100/2018 என்ற வழக்கில் நானும், 1ம் பிரதிவாதியும் வாதிகளாக இருந்து இந்த வழக்கு வாதி மீது கிரைய அக்ரிமெண்ட்டை நிறைவேற்றக்கோரி வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 10.10.2012ம் தேதி சீனிவாசன் தன் பேரனான 5ம் பிரதிவாதிக்கு பதிவு உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலில் வழக்குரை 1, 2 மற்றும் 3ம் இலக்கச்சொத்துக்களை பொறுத்து எழுதி வைத்துள்ளார் என்றால் அந்த சொத்துக்களில் பாதி சொத்தை தான் எழுதி வைத்துள்ளார். மீதி பாதி சொத்தை என் கணவர் பெயருக்கு வாக்கறாலாக பிரித்துக் கொடுத்து விட்டார். 24.10.2012ம் தேதி என் கணவர் என் பெயருக்கு ஒரு தானசெட்டில் மெண்ட் பத்திரத்தை எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்து என் கணவரின் சுயசம்பாத்திய சொத்து என்றால் அது

அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எனக்கும், வாதிக்கும் என் தாத்தா சீனிவாசன் இறந்தபின்பு தான் இந்த பிரச்சினைகளும், வழக்குகளும் வந்தது என்று சொன்னால் பாதை சம்பந்தமாக வாதி பிரச்சினை செய்ததாலும், எங்கள் கடையில் பங்கு கொடுக்காததாலும் தான் பிரச்சினை வந்தது. இந்த பிரச்சினைகள் அனைத்தையும் என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வாசவி காலனி வீட்டில் நான் தற்போது குடியில்லை. என் கணவர் இறந்த பிறகு வாசவி காலனி வீட்டில் நான் குடியிருப்பது பாதுகாப்பற்றது என்ற காரணத்தால் நான் அங்கிருந்து காலி செய்துவிட்டேன். அந்த வீட்டின் ஒரு பகுதியை மத்திய கலால் வரித்துறை அலுவலகத்திற்கு வாடகைக்கு விட்டோம் என்று சொன்னால் என் கணவர் இருக்கும்போதே வாடகைக்கு விட்டுவிட்டோம். என் கணவர் மற்றும் அவரது சகோதரிகளுக்கும் இடையே ஏதாவது பாக பிரிவினை செய்துகொண்டார்களா என்றால் இல்லை. வாதி கலா தான் சீனிவாசனின் சட்டப்படியான வாரிசு என்றும், அதனால் சீனிவாசனின் சொத்துக்களான வழக்குரை சொத்துக்களில் அவருக்கு 2/10 பாகம் கிடைக்கக்கூடியது என்றும் சொன்னால் சரியல்ல. ஒஎஸ் நம்பர் 164/2014, ஒஎஸ் நம்பர் 27/2014 ஆகிய வழக்குகள் இந்த வழக்கின் தன்மைக்கு சம்பந்தமில்லாத வழக்குகள் என்றால் சரியல்ல. 10.10.2012ம் தேதி சீனிவாசன் 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த உயில்சொத்துக்கள் பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும், அதைப் பொறுத்து அவர் எழுதி வைத்துள்ள உயில் பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும், அது இந்த வழக்கை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. 24.10.2012ம் தேதியில் என் கணவர் ராம்நிவாஸ் எனக்கு எழுதி வைத்த தானசெட்டில் மெண்ட் சொத்துக்கள் பூர்வீக கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும், அதை அவர் எனக்கு செட்டில் மெண்ட் எழுதி வைக்க அதிகாரம் இல்லை என்றும், அதனால் அந்த செட்டில் மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் தான் வாதி மற்றும் அவர் கணவருடைய சொத்துக்களை அபகரிக்கும் எண்ணத்துடன் போலிசில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றும்

சொன்னால் சரியல்ல. ஒஎஸ் நம்பர் 100/2018 வழக்கும் பொய்யான வழக்கு என்றும், அதுவும் பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

*(ஓம்)* S.சீனிவாசன் B.Sc.,M.L.,
**கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி**